

நெல்லை மாவட்டம் வள்ளியூர் அரசு தலைமை மருத்துவ மனையின் கட்டுமானப் பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மருத்துவப் பணி இணை இயக்குனர் லதா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட துணை செயலாளர் நம்பி, வள்ளியூர் சேதுராமலிங்கம் உள்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக இராமநாதபுரம் மாவட்ட திமுக சார்பாக மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம்.எம்.எல்.ஏ, தலைமையில் பரமக்குடி காந்தி சிலை முன்பு நடைபெற்றது. இந்த கண்டன பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், பூரண சங்கீதா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். மேலும் கூட்டத்தில் செ.முருகேசன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் வ.சத்தியமூர்த்தி, டாக்டர் சுந்தர்ராஜன் மற்றும் இன்பா ஏ.என்.ரகு, குணசேகரன், சுப.த.திவாகரன், விஜய் கதிரவன், பாஸ்கரன், கருப்பையா, சம்பத் ராஜா, பாஸ்கர பாண்டியன், ஆர்.கே.கார்மேகம், வி. வாசுதேவன், டி ஜெயக்குமார், சக்தி, கே.கதிரவன், குணசேகரன், கிருஷ்ணமூர்த்தி, உதயகுமார், கே.ஜே.பிரவீன், நிலோபர் கான், முத்துக்குமார், சண்முகம், பூபதி மணி, கோவிந்தராஜ், குலாம் மைதீன், ஆறுமுகவேல், மாயகிருஷ்ணன்,சண்முகநாதன், மனோகரன், மோகன், கே.அப்துல் ரகுமான், எஸ்.எம்.டி அருளானந்த் பூமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி சேது கருணாநிதி, ஜீவரத்தினம் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.

### தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.க.விற்கு தக்க பாடம் புகட்டுவர்!

# ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வரக் கூடியவர் தமிழக முதல்வர்!

## நிலக்கோட்டை பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், பிப்.14-

மத்தியில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரக் கூடிய ஒரே முதல்வர் திராவிடமாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் ஒருவரே என்று நிலக்கோட்டையில் நடைபெற்ற கண்டன பொதுகூட்டத்தில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறிப்பிட்டார்.

மத்தியில் ஆளும் மோடியின் தலைமையிலான பா.ஜ.க. அரசு நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்தை புறக்கணிப்பதை தமிழக மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்றும், நூறு நாள் திட்டத்தை முடக்கும் நோக்குடன் செயல்படும் பா.ஜ.க. விற்கு 2026ம் சட்டமன்ற தேர்தலில் தமிழக மக்கள் தக்க பாடம் புகட்டு வார்கள் என்று அவர் பேசினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பாக ஓரவஞ்சனையான நிதி பகிர்வு தமிழ்நாட்டின் முக்கிய திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மத்திய அரசை கண்டித்து நிலக்கோட்டையில் மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மு.பிலால் உசேன், எம்.மார்க்கிரேட் மேரி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், தமிழ்மணி, ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், சி.சௌந்தரபாண்டியன், பெ.கனக துரை, பெ.கரிகால பாண்டியன், என்.கனிக்குமார் மற்றும் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், பேரூர் கழக செயலாளர்கள் கே.சின்னதுரை, எம்.தங்கராஜன், பி.விஜயகுமார், பி.ஆர்.அருண்குமார்,



பேரூராட்சி மன்றத் தலைவர்கள் கே.சுபாசினி பிரியா, லலிதாதங்கராஜன், பா.சிதம்பரம், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர்கள் ந. விமல்குமார், ஆர்.தர்மலிங்கம், வி.தெய்வராணி, எ.கல்பனாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் ஆம்பூர் தர்மன், ஈரோடு இளையகோபால் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும்போது, மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு தொடர்ந்து தமிழகத்தை புறக்கனித்து வருகிறது. தனிப்பெரும் மெஜாரிட்டி இல்லாமல் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு, பீகார் மாநிலத்தில் நித்திஷ் குமார் துணையுடன் மத்தியில் ஆட்சி நடத்தி வரும் பா.ஜ.க அரசு தனிப்பெரும் மெஜாரிட்டியடன் ஆட்சி அமைத்து வரும் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசை குறை கூறுவதா? என கேள்வி எழுப்பினார். தமிழகத்திற்கு நிதி ஒதுக்குவதற்கு காரணம் என்ன மாநிலங்களில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற தத்துவத்தை கடைபிடித்து அதற்கு உயிர் கொடுத்த பேரறிஞர் அண்ணா, தமிழினத்தலைவர் கலைஞர் அதற்கு பின்னர் இன்று வரை அதற்காக நிற்கும் ஒரே தலைவர் கலைஞர் வழியில் வந்த மு.க.ஸ்டாலின் ஒருவரே என்றார். மாநிலத்தின் உரிமையை விட்டு க்கொடுக்காத ஒரே முதலமைச்சர் இந்தியாவில் இருக்கிறார் என்றால் அவர் நமது கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

**நிதியை தராத ஒன்றிய அரசு!**

தென் மாவட்டங்களில் வெள்ள சேதம் ஏற்பட்டபோது அதை பார்வையிட வந்த நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வெள்ள சேதங்களை பார்வையிட்ட பின்பு கோவில்களுக்கெல்லாம் சென்று சுவாமி கும்பிட்டுவிட்டு சென்றார். தமிழகம் சார்பாக வெள்ள சேதத்திற்காக ரூ.45ஆயிரம் கோடி கேட்ட போது அதை இன்றுவரை தராத அரசாக மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு உள்ளது. ஒன்றிய அரசு பட்ஜெட்டில் உத்திரபிரதேசத்திற்கு மட்டும் ரூ.2 லட்சத்து 55ஆயிரம் கோடி தென் மாநிலங்களில் உள்ள 5 மாநிலங்களுக்கு 2லட்சத்து 55 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதுதான் மத்திய அரசின் தர்மமா? என கேள்வி எழுப்பினார். பா.ஜ.கவிற்கு நாம் அளிக்கும் வாக்கு பாவத்திற்கு சமமாகும். அந்த அளவிற்கு தமிழகத்தை பா.ஜ.க அரசு வஞ்சித்து வருகிறது.

ஊரகவளர்ச்சித்துறைக்கு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டு வந்த நிலையில் கழுதை தேய்ந்து கட்டெறுப்பு ஆன கதையாய் தொடர்ந்து 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை குறைத்தபடியே வருகிறார்கள். கடந்த ஆண்டு ரூ.86ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்தார்கள். கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய ஊரக வளர்ச்சி திட்ட பணிக்கானநிதியைரூ.76ஆயிரம் கோடியாக தொடர்ந்து ரூ.10ஆயிரம் கோடியாக குறைத்தபடியே வருகிறார்கள். ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு தமிழகத்திற்கு எந்த ஒரு நிதி அறிவிப்பும் அறிவிக்கவில்லை தமிழகம் தலைசிறந்த மாநிலமாக உருவாகி வருவதை மத்திய அரசால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை அதனால்தான் எந்த ஒரு நிதியையும் ஒதுக்கீடு செய்யவில்லை இருந்தாலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களுக்கு செயல்படுத்த வேண்டிய நலத்திட்டங்களை தொடர்ந்து தடையின்றி செயல்படுத்தி வருகிறார்.

**மக்களின் வாழ்வாதாரத்தை கெடுக்கும் பா.ஜ.க. அரசு!**

தமிழகத்திற்கு ரயில்வே திட்டம் மற்றும் சாலை வசதி திட்டம் எதுவும் ஒதுக்கவில்லை. மதுரையிலும், கோவையிலும் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று தமிழக அரசு கோரிக்கை விடுத்தும் அதை மத்திய அரசு பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. நிதி ஒதுக்கீட்டில் தமிழக அரசை தொடர்ந்து புறக்கனிப்பதற்கு காரணம் தமிழக அரசும் சரி தமிழக மக்களும் முன்னேறிவிட கூடாது என்று என்னம் அவர்களுக்கு உள்ளது பரந்த மனப்பான்மையுடன் செயல்பட வேண்டிய அவர்களுடைய எண்ணம் (பா.ஜ.க) குறுகிவிட்டது. மத்திய அரசு நிதியை நிறுத்தி னாலும் தினமும் 9லட்சம் பேருக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டம் மூலம் பணிகளை வழங்கி வருகிறோம். 100 நாள் வேலை திட்டம் என்பது ஏதோ ஒரு வேலை திட்டம் அல்ல முத்தமிழ் அறிஞர் கலைஞரும், அன்னை சோனியாகாந்தி அவர்களும் கிராமப்புற ஏழை மக்களுக்காக செயல்படுத்திய திட்டம் கிராமங்களில் வேலையில்லா தின்டாட்டம் வரக்கூடாது என்ற நோக்கில் செயல்பட்டதால் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் போது கிராமங்களில் வறுமை ஒழிந்தது. ஆனால் இப்போது ஆளும் மோடி தலைமையிலான பாஜக அரசு 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை குறைப்பதன் மூலம் கிராமங்களிலும் வேலையில்லா தின்டாட்டம் உருவாக போகிறது. இந்தியாவில் வாழும் 120 கோடி மக்களுக்காக செயல்படுத்திய இந்த திட்டத்தை மத்தியில் ஆளும் பாஜக அரசு பாழாக்கி வருகிறது. தமிழகத்தில் 80ஆயிரம் கிராமங்கள் உள்ளன 12ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் வாழும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மத்திய அரசு கெடுத்து வருகிறது. கிராமம் முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்பதை மத்தியில் ஆளும் பாஜக அரசு மரந்தவிட்டது. அதை உணரும் காலம் விரைவில் வரும். இதை கருத்தில் கொண்டுதான் தமிழக முதல்வர் தமிழகத்தில் எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் 100 நாள் வேலை திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். தமிழக மக்கள் மட்டுமின்றி இந்தியாவில் வசிக்கும் கிராம மக்களின் நலனில் அக்கறை இல்லை என்பதை மத்திய அரசின் பட்ஜெட்டில் தெள;ளத் தெளிவாக அறிவித்துவிட்டது. இதை கண்டித்து தான் கழக தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் இந்த மாபெரும் கூட்டம் நடைபெற்றுள்ளது. 2026ம் சட்டமன்ற தேர்தலில் தமிழக மக்கள் பா.ஜ.க.விற்கு தக்க பாடம் புகட்டு வார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

கண்டன கூட்டத்தில் முன்னதாக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாநகர மேயர் இளமதிஜோதிபிரகாஷ், துணைமேயர் ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் ப.க. சிவகுருசாமி, சி.ராமன், த.நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பிள்ளையார்நத்தம் முருகேசன், வி.எம்.எ. கருமலைப் பாண்டி, ரெட்டியார்சத்திரம் மணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், ஐ.கலைராஜா, வி.மூர்த்தி, ச.சுப்புலட்சுமி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், மருத்துவர் அணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், பொறியாளர் அணி அமைப்பாளர் என்.செந்தில்குமார், விவசாய மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.டி.ஆர்.பார்த்தசாரதி, இலக்கிய அணி அமைப்பாளர் வி. முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமரன். வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க. சுரேஷ் குமார், வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாணவரணி துணை அமைப்பாளர் குட்டி என்ற துரைப் பாண்டி, இளைஞரணி காதர்மைதீன், ராஜ்குமார், பேரூர் கழக செயலாளர்கள் கன்னிவாடி இளங்கோவன், ஸ்ரீராமபுரம் ராஜா, சின்னாளபட்டி மோகன் ராஜ், அகரம் இல.ஜெயபால், அய்யம்பாளையம் ஆர்.தங்கராஜ் மற்றும் நிலக்கோட்டை வடக்கு தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இன்னாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், மகளிரணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக நிலக்கோட்டை பேரூர் கழக செயலாளர் ஜெ.ஜோசப் கோவில்பிள்ளை நன்றி கூறினார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மற்றும் பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர மற்றும் பகுதி கழகங்களில் மேற்கொண்டு வரும் கட்சி வளர்ச்சி பணிகள், கழக நிகழ்ச்சிகள் குறித்து கேட்டறிந்து, கழக வளர்ச்சிக்கான பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர்செல்வம், துணை செயலாளர்கள் எம். ராஜன், பி.வேல்முருகன், பொருளாளர் இரா.சுதாகர், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, மு.சேக்மீரான் உட்பட மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஆர்.எஸ். சுடலை கண்ணு தலைமையில் நாம் தமிழர் கட்சியின் நாங்குநேரி தொகுதி செயலாளர் அந்தோணி விஜய் மற்றும் அரசகுமார், அந்தோணி, ராஜ் உள்ளிட்டவர்கள் அக்கட்சியிலிருந்து தங்களை விடுவித்து தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். புதியதாக கழகத்தில் இணைந்தவர்களிடம் தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ்.சுடலை கண்ணு சிறப்பாகவும் உத்வேகத்துடனும் கழகப் பணியாற்றிட வேண்டும் என்று எடுத்துக் கூறி புன்முறுவலுடன் வரவேற்று கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் வாசுதேவன், பண்ணையார் ஸ்டாலின் தேவராஜ் ஆகிய நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்

### பிப்ரவரி 14 (2006)



**வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.**

**தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணிய மானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே பார்த்திபனூர் கமுதி சாலையில் தேவநேரி என்ற இடத்தில் தனியார் பள்ளி வேன் கவிழ்ந்ததில் கிரெசன்ட் பள்ளியைச்சேர்ந்த 12 குழந்தைகள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தகுழந்தைகள்பரமக்குடிஅரசுமருத்துவமனையில்சிகிச்சைக்காகஅனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்ததகவல் அறிந்த பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மருத்துவமனையில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.உடன் தலைமை மருத்துவர் முத்தரசன் மற்றும் மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர்கள் உடன் இருந்தனர்.